# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2012 - 2013

## தமிழ்மொழி - வளர் தமிழ் 6

சுட்டெண்:..........................................................   நேரம்: 150 மணித்துளிகள்

**1) சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. தமிழின் இனிமை கருதி அதற்கு வழங்கப்படும் பெயர்களில் ஒன்று

   அ) செந்தமிழ்   ஆ) தேன்தமிழ்
   இ) பைந்தமிழ்   ஈ) நல்லதமிழ்

   அ) ☐   ஆ) ☐   இ) ☐   ஈ) ☐

2. தமிழிலுள்ள முதல் எழுத்துகளின் எண்ணிக்கை

   அ) 12   ஆ) 216   இ) 18   ஈ) 30

   அ) ☐   ஆ) ☐   இ) ☐   ஈ) ☐

3. உள்ளத்தினின்றும் வெளிப்படும் நல்லியல்பு

   அ) கலாசாரம்   ஆ) நாகரிகம்   இ) பண்பாடு   ஈ) மானம்

   அ) ☐   ஆ) ☐   இ) ☐   ஈ) ☐

4. சொல்லியத்தில் கருத்துத் தொடங்கும் சொல்

   அ) எழுவாய்   ஆ) பயனிலை
   இ) அடைமொழி   ஈ) செயப்படுபொருள்

   அ) ☐   ஆ) ☐   இ) ☐   ஈ) ☐

5. நாட்டார்பாடல்களைப் பாடியவர்

அ) புலவோர் ஆ) நகர்மக்கள்

இ) நாட்டுப்புறமக்கள் ஈ) நாடோடிமக்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. தன் இனத்தை அழைத்துக் கூடி உண்ணும் பறவை

அ) புறா ஆ) காகம் இ) மயில் ஈ) கிளி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. ஒழுக்கத்தில் சிறந்தவரைத் தமிழர் ________________ எனப் போற்றுவர்.

அ) ஆன்றோர் ஆ) சான்றோர் இ) வள்ளல் ஈ) அறிஞர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்ற பழமொழியின் கருத்து.

அ) வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஆ) காற்றுள்ளபோதே பிறரைத் தூற்ற வேண்டும்.

இ) காற்றில்லா விட்டால் தூற்ற முடியாது.

ஈ) காற்றுள்ள போதே நெல் தூற்ற வேண்டும்.

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. தமிழரிடம் இருந்து குடியுரிமை, மொழியுரிமை, கல்வியுரிமை, வாழ்வுரிமையைப் பறித்தவர்கள்

அ) ஆங்கிலேயர் ஆ) ஒல்லாந்தர்

இ) சிங்களவர் ஈ) போத்துக்கேயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. அவர்கள் என்ற சொல் குறித்து நிற்கும் இடவகை

அ) தன்மை ஆ) முன்னிலை

இ) படர்க்கை ஈ) ஒருமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. எல்லாளனின் நினைவாலயம் அமைக்கப்பட்ட இடம்

அ) கண்டி
ஆ) அநுராதபுரம்
இ) மன்னார்
ஈ) கொழும்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. குழந்தையைத் தமிழ்ச்செல்வம் ஆகமாட்டாயா? என்று கேட்பவர்.

அ) உறவினர்
ஆ) ஆசிரியர்
இ) புலவர்
ஈ) பெற்றோர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. பின்வருவனவற்றுள் வினைமுற்று.

அ) ஓடி
ஆ) ஓடினான்
இ) ஓடிய
ஈ) ஓடுகின்ற

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. நாம் அயலவரிடம் ____________ வாழ வேண்டும்.

அ) நல்லுறவுடன்
ஆ) விருப்பமின்றி
இ) கோபத்துடன்
ஈ) தொடர்பின்றி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. நெல்லுக்கு இறைத்தநீர் வாய்க்கால் வழியோடி இதற்கும் பொசியும்

அ) வாழைக்கும்
ஆ) புல்லுக்கும்
இ) கல்லுக்கும்
ஈ) நெல்லுக்கும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. "மூட ஆமை" என்ற பாடலில் நாம் அறிந்து கொண்டது

அ) உண்மை நேர்மை
ஆ) பொய் களவு
இ) கடமை அடக்கம்
ஈ) உண்மை களவு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்?

அ) ஐந்துவகை
ஆ) எழுவகை
இ) அறுவகை
ஈ) இரண்டுவகை.

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. பெலிவாவிக் குளத்தைக் கட்டிய மன்னன்

அ) குளக்கோட்டன் ஆ) எல்லாளன்

இ) அசேலன் ஈ) பராக்கிரமபாகு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. பாடலில் வரும் மயிலாடு மலை என்ற சிற்றூரைக் குறிக்கும் மற்றொரு பெயர்

அ) அழகுமலை ஆ) மயில்மலை

இ) அழகமர்சோலை ஈ) கன்னியாகுமரி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. தரப்பட்டுள்ள சொற்களின் பலர்பாலைக் குறிக்கும் சொல்

அ) மாறன் ஆ) மாடுகள் இ) தங்கை ஈ) அவர்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. சங்கு சுட்டாலும் வெண்மை தரும். அதுபோல மேன்மக்கள் கெட்டாலும்

அ) மேன்மக்களே ஆ) ஏழைகளே

இ) தீயவர்களே ஈ) கெட்டவர்களே

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோருக்கும் ____________ மழை.

அ) பெய்யாது ஆ) நில்லாது

இ) பெய்யும் ஈ) தூறும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. எதன் அழகு முகத்தில் தெரியும்

அ) நடையின் ஆ) உடையின்

இ) முகத்தின் ஈ) அகத்தின்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. படிப்பான் என்ற வினைமுற்றின் காலம்

அ) நிகழ்காலம் ஆ) இறந்தகாலம்

இ) எதிர்காலம் ஈ) நல்லகாலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. நெல் அரிவி வெட்டும் போது பாடப்படும் பாட்டு

அ) தாலாட்டுப்பாட்டு    ஆ) அறுவடைப்பாட்டு

இ) ஏர்ப்பாட்டு    ஈ) நாட்டுப்புறப்பாட்டு

அ) ☐   ஆ) ☐   இ) ☐   ஈ) ☐

26. தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடங்கிய ஆண்டு

அ) 1983    ஆ) 1976    இ) 1956    ஈ) 1972

அ) ☐   ஆ) ☐   இ) ☐   ஈ) ☐

27. தன் தலையை வெட்டிப் புலவருக்குப் பரிசளிக்கத் துணிந்த மன்னன்

அ) வளவன்    ஆ) குமணன்

இ) இரும்பொறை    ஈ) சேரன்

அ) ☐   ஆ) ☐   இ) ☐   ஈ) ☐

28. மாமன்னன் எல்லாளன் எத்தனை ஆண்டுகள் இலங்கையை ஆண்டான்?

அ) 40    ஆ) 34    இ) 44    ஈ) 54

அ) ☐   ஆ) ☐   இ) ☐   ஈ) ☐

29. புலவர் பாடிப் பரிசு பெற்றார். இங்கே வந்துள்ள செயப்படுபொருள்.

அ) புலவர்    ஆ) பாடி

இ) பரிசு    ஈ) பெற்றார்

அ) ☐   ஆ) ☐   இ) ☐   ஈ) ☐

30. சித்திரை முழுமதியின் எழுகைக் காட்சியைக் காண மக்கள் செல்வது

அ) மயிலாடுமலை    ஆ) திருகோணமலை

இ) கன்னியாகுமரி    ஈ) கன்னியாய்

அ) ☐   ஆ) ☐   இ) ☐   ஈ) ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

அன்று காலை நாவரசியின் தாயார் தனது அன்றாடக் கடமைகளைச் செய்து கொண்டிருந்தார். அப்போது நாவரசியும் தம்பி மாறனும் அங்கே வந்தனர். அவர்களுடைய கைகளிலே பூங்கொத்தும் ஒரு பொதியும் இருந்தன. இருவரும் மகிழ்ச்சியோடு அவற்றைத் தாயாருக்குக் கொடுத்தனர். பின் தாயாரைக் கட்டியணைத்து முத்தமிட்டனர். தாயார் பிள்ளைகளைப் பார்த்து வியப்புடன் சிரித்தார். அம்மா இன்று தாயர்நாள். பிள்ளைகள் தங்கள் தாயரைப் போற்றுகிற நாள். அது தான் நாங்கள் உங்களுக்கு வாழ்த்துச் சொல்லி பரிசு தருகிறோம் என்றனர். நீங்கள் பூவும் பரிசும் தந்தால் போதாது. அம்மாவுக்கு இதைவிடப் பெரிய பரிசு தரவேண்டும் என்றார். உங்களுக்கு என்ன பரிசு தரவேண்டும் அம்மா? என்று பிள்ளைகள் கேட்டனர். நீங்கள் நன்றாகப் படித்து, நல்ல பிள்ளைகளாக வாழ வேண்டும். அது தான் நீங்கள் எனக்குத் தரும் பரிசு என்றார். பிள்ளைகள் மகிழ்வுடன் "அதை நாங்கள் அம்மாவுக்குத் தருவோம்" என்று கூறினர்.

1. தாயர்நாள் என்றால் என்ன?

______________________________________________

______________________________________________

2. தாய் பிள்ளைகளிடம் விரும்பிக் கேட்கும் பரிசு என்ன?

______________________________________________

______________________________________________

3. பிள்ளைகளின் கையில் இருந்தவை யாவை?

______________________________________________

______________________________________________

4. அவர்கள் அம்மாவிடம் பரிசுகள் கொடுத்து என்ன செய்தனர்?

______________________________________________

______________________________________________

5. பொருள் தருக.

மகிழ்ச்சி :- ______________________

புள்ளிகள் 10

3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.

1. தமிழர் பண்பாட்டில் தலை சிறந்தது எது?

______________________________

______________________________

2. கொக்குகள் ஆமையிடம் மறந்திடாதே எனக் கூறியது எதை?

______________________________

______________________________

3. எல்லாளனது ஆட்சியில் நாடு எப்படித் திகழ்ந்தது?

______________________________

______________________________

4. அறமிது மறமிது என்றறியக் கற்க வேண்டிய நூல் எது?

______________________________

______________________________

5. தமிழ் மக்களது அமைதி வழிப்போராட்டம் ஏன் ஆயுதப் போராட்டமாக மாறியது?

______________________________

______________________________

6. போத்துக்கேயர் இலங்கைக்கு வரும் போது தமிழீழப் பகுதியில் நிலவிய அரசு எது?

______________________________

______________________________

7. எல்லாளன் கட்டிய "பெலிவாவி" இன்று எப்படி அழைக்கப்படுகிறது?

______________________________

______________________________

புள்ளிகள் 10

**4) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. உயர்திணைக்குரிய பால்கள் எவை?

______________________________________________

______________________________________________

2. தோட்டத்தில் வண்ணவண்ணப் பூக்கள் பூத்திருந்தன. இதில் வரும் எழுவாய் பயனிலை என்பவற்றைத் தருக.

______________________________________________

______________________________________________

3. அறுவகைப் பெயர்சொற்கள் எவை? இடப்பெயருக்கு ஒரு எடுத்துக்காட்டுத் தருக.

______________________________________________

______________________________________________

______________________________________________

4. தரப்பட்டுள்ள சொற்களை வைத்து சொல்லியங்கள் (வாக்கியங்கள்) எழுதுக.

ஆழி :- ______________________________________________

______________________________________________

எழில் :- ______________________________________________

______________________________________________

5. தரப்பட்டுள்ள சொற்களுக்கு இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பவற்றை எழுதுக.

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| ____________ | எழுதுகிறான் | ____________ |
| ____________ | ____________ | வருவான் |
| நடந்தான் | ____________ | ____________ |

புள்ளிகள் 15

6) பாடலில் வரும் வினாக்களுக்கு முழுவிடை தருக.

தமிழர் என்றோர் இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடைய மொழியாகும்
அன்பே அவனது வழியாகும்

அறிவின் கடலைக் கடைந்தவனாம்
அமிர்தம் திருக்குறள் அடைந்தவனாம்
பொறியின் ஆசையைக் குறைத்திடவே
பொருந்திய நூல்கள் உரைத்தவனாம்

**நாமக்கல் கவிஞர்**

1. இப்பாடலைப் பாடியவர் யார்?

______________________________

______________________________

2. எதன் கடலைக் கடைந்தவன்?

______________________________

3. அவனது வழி எது?

______________________________

4. இங்கு வந்துள்ள அறநூல் எது?

______________________________

______________________________

5. இப்பாடலில் யாரைப் பற்றிக் கூறப்படுகிறது?

______________________________

______________________________

புள்ளிகள் 10

7) **பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

நான் தொலைக்காட்சி பார்ப்பேன். எனக்குத் தமிழ்த் திரைப்படம் பார்ப்பது மிகவும் பிடிக்கும். நான் படத்தில் வரும் பாட்டுகளையும் கேட்பேன். நான் அவற்றை மகிழ்ச்சியுடன் பாடுவேன். எனது தங்கையும் அந்தப் பாட்டைக் கேட்பாள்.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 05

8) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

★ தமிழர் பண்பாடு

★ மூட ஆமை என்ற பாடலை உமது உரைநடையில் தருக.

★ நான் தமிழ் கற்கும் பள்ளி.

புள்ளிகள் 20